செய்தி வெளியீடு எண்: 091 நாள் : 11.02.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் 9 கோடியே 77 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், 30 கோடியே 11 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும் திறந்து வைத்து, 49 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டியும், கட்டுமான தொழிலாளர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கிட மூன்று நகரும் மருத்துவமனைகளின் சேவையினையும் துவக்கி வைத்தார்கள்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், தொழிற்பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை, கருத்தில் கொண்டும் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.9.2015 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை காணொலிக் காட்சி மூலமாகவும், மேலும் தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை, விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களையும்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென திருவள்ளூர் மாவட்டம் – வடகரையிலும், திருச்சிராப்பள்ளி மத்திய

சிறை வளாகத்தில் சிறைவாசிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கிளை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

திறன் பயிற்சிகளை வழங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, கிண்டி, மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தற்போது செயல்பட்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடத்தின் மேல் தளத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கக அலுவலகம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.5.2013 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, சென்னை – கிண்டியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக கட்டடத்தின் முதல் தளத்தில் 10,660 சதுர அடி கட்டட பரப்பளவில், 1 கோடியே 58 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக அலுவலகக் கட்டடம்;

கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கடல்சார் இயந்திர பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான கட்டடம்; திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூர் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 56 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொருத்துநர் மற்றும் கட்டடப்பட வரைவாளர் ஆய்வகக் கட்டடம் மற்றும் அடிப்படை பயிற்சி மையத்தில் 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவு தயாரிப்பு மற்றும் உபசரிப்பு உதவியாளர் (Catering & Hospitality Assistant) ஆய்வகக் கட்டடம்;

வேலூர் மாவட்டம் – அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பற்றவைப்பவர் மற்றும் ஏ/சி மெக்கானிக் ஆய்வகக் கட்டடம்; இராமநாதபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 42 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இலகுரக வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு ஆய்வகக் கட்டடம்;

கரூர் மாவட்டம் – கரூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம்; தூத்துக்குடி மாவட்டம் – வேப்பலோடையில் 2 கோடியே 48 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம்;

என மொத்தம் 9 கோடியே 77 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகள் மாவட்ட அளவில் தொழிலாளர் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு தொழிலாளர்கள் அதிக அளவில் வருவதால் மாவட்டந்தோறும் போதுமான உள் கட்டமைப்பு வசதியுடன் சமூக பாதுகாப்புத் திட்ட தொழிலாளர் அலுவலர் அலுவலகங்களுக்கு சொந்த அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.5.2013 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் (தெற்கு), தருமபுரி மாவட்டம் – விருப்பாட்சிபுரம் கிராமம், திண்டுக்கல் மாவட்டம் – செட்டிநாயக்கன்பட்டி கிராமம், விருதுநகர் மாவட்டம் – கூரைக்குண்டு கிராமம், திருநெல்வேலி மாவட்டம் – குலவணிகர்புரம் கிராமம், தஞ்சாவூர் மாவட்டம் – பிள்ளையார்பட்டி கிராமம், நாமக்கல் மாவட்டம் – சிலுவம்பட்டி கிராமம், சிவகங்கை மாவட்டம் – கஞ்சிரங்கல், தேனி மாவட்டம் – அல்லி நகரம் கிராமம், கரூர் மாவட்டம் – தாந்தோணி கிராமம், கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில், புதுக்கோட்டை மாவட்டம்– நத்தம்பண்ணை கிராமம், கடலூர் மாவட்டம் – மஞ்சக்குப்பம், தூத்துக்குடி மாவட்டம் – ஐயன்அடைப்பு, வேலூர் மாவட்டம் – மேல்மொணவூர் கிராமம், சேலம் மாவட்டம் – ஐயம்பெருமாள்பட்டி கிராமம், நாகப்பட்டினம் மாவட்டம் – காடம்பாடி கிராமம், ஈரோடு மாவட்டம் – காசிப்பாளையம் கிராமம் ஆகிய

இடங்களில் 49 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் கட்டும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ஆய்வக வசதி மற்றும் பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன் கூடிய 15 நகரும் மருத்துவமனைகள், பிற மாவட்டங்களில் 35 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.8.2014 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, முதற்கட்டமாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஆய்வக நுட்புநர், உதவியாளர் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவுடன், ஆய்வக வசதி உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள மூன்று நகரும் மருத்துவமனைகளின் சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடங்களில் விபத்து ஏற்பட்டு இறக்கும் போது அவர்களுக்கான நிதி உதவி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.8.2014 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், கட்டுமானப் பணியின் போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கட்டுமானத் தொழிலாளி திரு.என். குமார் அவர்களின் மனைவி திருமதி கே. பானுமதி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த

திரு. மிக்கேல் ஜஸ்டின் என்பவரின் மனைவி திருமதி ஜே. சகாய வினிஸ்டாள் ஆகியோருக்கு தலா 5 லட்சம் ரூபாய்க்கான விபத்து மரண உதவித் தொகைக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி, உயர்த்தப்பட்ட விபத்து மரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

மேலும், பெரம்பலூரில் 1 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் முதல் தளத்துடன், 5,400 சதுர அடி கட்டட பரப்பளவில், கூட்டரங்கம், உற்பத்தி பொருட்காட்சி மையம், அலுவலர் அறைகள், கணினி அறை, பயிற்சி அறை, உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகக் கட்டடம்;

அரியலூர் மாவட்ட தொழில் மையக் கட்டடம் மற்றும் சென்னை – கிண்டி, மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ஆகிய இடங்களில் 3 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள்; திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 3 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள்;

மாநிலத்தில் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், குறு மற்றும் சிறு தொழில்களுக்கு கடன் வசதிகள் வழங்கும்பொருட்டு தொழில் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் (தாய்கோ வங்கி) சாத்தூர் மற்றும் அம்பத்தூர் கிளைகளுக்காக 78 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வங்கிக் கட்டடங்கள்;

சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்து வருவதாலும், தொழிற் பேட்டைகள் துவங்க போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், தற்போதுள்ள தொழிற் பேட்டைகளை விரிவுபடுத்த போதிய இடம் இல்லாததாலும், சிறு தொழில் முனைவோர், தொழிற் கூடங்களை அமைக்க உதவும் வகையில், அடுக்கு மாடி தொழில் வளாகங்களை (Multistoried Industrial Complexes) அமைத்துத்தர அரசு முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக, திருவள்ளூர் மாவட்டம், திருமழிசையில் சிறு தொழில் முனைவோருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில்

குறுந்தொழில் கூடங்களை ஒதுக்கும் பொருட்டு 20 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடி தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் என்று 7.5.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, திருவள்ளூர் மாவட்டம், திருமழிசையில் அமைந்துள்ள சிட்கோ தொழிற் பேட்டையில் 1.788 ஏக்கர் நிலத்தில், 1,20,640 சதுர அடி கட்டட பரப்பளவில், நான்கு தளங்களுடன், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 79 தொழிற்கூடங்களுடன், சுற்றுச்சுவர், மழை நீர் சேகரிப்பு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, மின் வசதி, சுற்றுப்புற சாலை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி தொழில் வளாகம்;

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை சிட்கோ தொழிற் பேட்டையில் 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிட்கோ கிளை அலுவலகக் கட்டடம்;

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் தொழிற்பேட்டையில் 1.22 ஏக்கர் நிலத்தில், 1,586 சதுர அடி கட்டடப் பரப்பளவில், 32 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது வசதி மையக் கட்டடம்;

சிட்கோவின் செயல்பாடுகளை அனைத்து மாவட்டங்களிலும் துரிதப்படுத்தவும், தொழில் முனைவோரின் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்யவும், தொழில் மயமாக்கலை விரைவுபடுத்தவும் அரியலூர், தருமபுரி, திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தேனி, நீலகிரி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருப்பூர், விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிட்கோவின் கிளை அலுவலகங்கள்;

என மொத்தம் 30 கோடியே 11 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப.மோகன், தலைமைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ்நாடு

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு.ஜே.சி.டி. பிரபாகரன், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அம்புஜ் ஷர்மா, இ.ஆ.ப., குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஜக்மோகன் சிங் ராஜூ, இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 11.2.2016